**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT,**

**PUDUKKOTTAI**

**C.C. No: 48/2019**

**Deposition of Witnesses for PW 4**

| Name | : | திருமதி. டயானா ஏஞ்சலின் | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **<u>04.02.2021</u>**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி லஞ்ச ஒழிப்புத்துறை பிரிவில் த.காவலராக பணியாற்றிவருகிறேன். கடந்த 25.08.2017ம் தேதி அரியமங்கலம் காவல் நிலையத்தில் மு.நி.கா. பணியாற்றியபோது 11.30 மணிக்கு காவல் ஆய்வாளர் என்னையும் த.கா. ரத்தினம் , த.கா. சுரேஷ், ஆகியோர்களை அழைத்துக்கொண்டு அரியமங்கலம் தெற்குஉட்கடை உங்களாயிஅம்மன் கோவில் தெரு, க.எண். 6/33, வீட்டின் பின்புறம் ஒரு நபர் கஞ்சா விற்பதாக ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவவின் பேரில் தக்க உபகரணங்களுடன் தகவல் உண்மைதான என்பதை அறிய எங்களை ஆய்வாளர் அழைத்துச் சென்றார். தகவளாளி அடையாளம் காட்டிவிட்டு சென்றுவிட நாங்கள் மறைந்து நின்று கண்காணித்தபோது ஒரு நபர் பொட்டலத்தை மடித்துக்கொண்டு விற்றுக்கொண்டிருந்தார். எங்கள் வருகையை கண்டதும் பொட்டலத்தை வாங்கியவர் ஓடிவிட விற்பனை செய்தவரை சுற்றிவளைத்து பிடித்து ஆய்வாளர் விசாரித்தபோது பெயர் விலாசம் கூறினார். ஆஜர் எதிரிதான் விற்பனை செய்தவர் ஆவார். அவர் வைத்திருந்து பாலித்தீன்பையை சோதனை செய்யலாமா அதற்கு நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதள் அதிகாரி பெற்ற அதிகாரியிடமோ சோதனை செய்ய ஆஜர்படுத்தலாமா என்று ஆய்வாளர் கேட்டபோது எதிரி யாரிடமும் ஆஜர்படுத்த தேவையில்லை என கூறி என்னையும் என் பையையும் நீங்களே சோதனை செய்யலாம் என்று எதிரி சொன்னதை காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல நாங்கள் கொண்டு சென்ற மடிக்கணிணியில் தட்டச்சு செய்தேன். பின்பு நாங்கள் தட்டச்சு செய்த சோதனை அறிக்கையை காவல் நிலையம் கொண்டு வந்து பிரின்ட் எடுத்து மீண்டும் சம்பவம் இடம் சென்று எதிரியிடம் காண்பித்து அவரிடம் கையொப்பம் பெற்றோம். பிறகு சம்பவ இடத்தில் கைது அறிவிப்பு, மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை மடிக்கணிணி மூலம் தட்டச்சு செய்து பின்பு காவல் நிலையம் வந்து பிரின்ட் எடுத்து சம்பவ இடம் போய் ஆய்வாளரிடம் கொடுத்தேன். இது சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**கு.வி.**

மடிக்கணிணியில் தட்டச்சு செய்தபிறகு காவல் நிலையம் சென்று பிரின்ட் எடுத்த விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். சோதனை சம்மதக் கடிதம் , கைது அறிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை எத்தனை மணிக்கு தட்டச்சு செய்தோம் என்ற விவரத்தை ஆய்வாளருக்கு சொல்லவில்லை. இவ்வழக்கு ஆவணங்கள் எதிலும் நான் சாட்சி கையெழுத்துப்போடவில்லை. இந்த வழக்கில் ஆய்வாளர் எந்தெந்த பொருட்களை கைப்பற்றினார் என்று தெரியும். கஞ்சா மற்றும் கஞ்சா விற்ற பணத்தை கைப்பற்றினார். எவ்வளவு எடை கொண்ட கஞ்சாவை கைப்பற்றினார் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. நான் சொல்வது போல சம்பவ இடத்தில் வைத்து ஆவணங்களை மடிக்கணிணியில் தட்டச்சு செய்ததாக சொல்வது தவறு என்றும் ஆய்வாளர் சொன்னதின் பேரில் காவல் நிரைலயத்தில் வைத்து ஆவணங்களை தட்டச்சு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயம் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் இருந்திருந்தால் ஆவணங்களில் சாட்சி கையெழுத்துப் போட்டிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.